Lifeline

மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vo2 - No 09 Pages 4 Sunday, 19 April 2009 Free Copy



'மீண்டும் வாழ்வோம்' நிகழ்ச்சியினை தினமும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரை சூரியன் அலைகளில் கேட்கலாம்

வன்னி மக்களுக்குத் தொடரும் மருத்துவ உதவிகள்

வவுனியாவில் உள்ள 15 நலன்புரி நிலையங்களில் 64,147 இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர். வன்னியிலிருந்து கால்நடையாகவே வவுனியாவிற்கு வருகை தந்தவர்களில் சிலர் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் வன்னியிலிருந்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் உதவியுடன் கடல் மார்க்கமாக புல்மோட்டை வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளிகளும் வவுனியா பொது வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளைப் பெற்றுவருகின்றனர். இவர்களுக்கான வைத்திய சேவைகளை மேலும் திறம்பட வழங்குவதற்காக சுகாதார அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து திருகோணமலை மாவட்ட அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் மாகாண சுகாதார திணைக்கள உயர் அதிகாரி வைத்திய கலாநிதி குணாளன் தெரிவிக்கையில், 'வருகின்ற நாட்களில் கண்டியிலிருந்தும், மாத்தளையிலிருந்தும் அத்துடன் களுபோவில வைத்திய சாலையிலிருந்தும் மருத்துவக் குழுவொன்று அங்கு செல்லவிருக்கின்றது. பல இடங்களிலிருந்தும் பலர் அம்மக்களுக்கு மருத்துவ உதவிகளை செய்ய முன்வந்திருக்கின்றனர்' என்றார்.

இந்நிலையில் வவுனியா பூவரசங்குளம் வைத்தியசாலையிலும் செட்டிகுளம் வைத்தியசாலையிலும் மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை வன்னியிலிருந்து மக்கள் நாளாந்தம் வவுனியா நோக்கி வருகை தந்த வண்ணமுள்ளனர். வருகை தருபவர்கள் முதலில் பாடசாலைக் கட்டிடங்களில் தங்க வைத்து அதன் பின்னர் மெனிக்பாமுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர். எதிர்வரும் காலங்களில் மேலதிகமான மக்கள் ஒரே நேரத்தில்



ஐ.சி.ஆர்.சி.யினால் வன்னியிலிருந்து புல்மோட்டைக்கு அழைத்துவரப்பட்ட நோயாளர்களை படத்தில் காணலாம்

இடம்பெயர்ந்து வருவார்கள் என அரசு எதிர்பார்ப்பதனால் அவர்களை வவுனியாவில் தங்க வைப்பதற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து வவுனியா மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ரஞ்சனி ஒஸ்வெல்ட் தெரிவிக்கையில் வவுனியாவில் உள்ள இரண்டாந்தர பாடசாலைக் கட்டிடங்கள் முழுவதும் எடுக்கப்படவுள்ளதாகவும் சிலவேளைகளில் அனைத்து பாடசாலைகளும் அவர்களைத் தங்க வைக்க எடுபடக்கூடும் எனவும் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை 7570 பேர் வன்னியிலிருந்து புல்மோட்டை வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்களில் இதுவரை 17 பேர் மரணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது வவுனியாவில் ஆறு பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாக செயற்பட்டு வருகின்றன. இதேவேளை வன்னி புதுமாத்தளன் பகுதியிலிருந்து நோயாளிகளை அழைத்து வரும் செயற்பாட்டில் தொடர்ந்தும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஈடுபட்டு வருகின்றது. புல்மோட்டையில் சிகிச்சை பெற்று வந்தவர்கள் சிலர் மேலதிக சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். புல்மோட்டை வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்ட நோயாளிகளில் இதுவரை 17 பேர் மரணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை 7570 பேர் வன்னியிலிருந்து புல்மோட்டை வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

சாதாரணமாகவே புல்மோட்டையிலிருந்து நோயாளிகளை ஏனைய வைத்தியசாலைக்கு அனுப்புகின்ற போது ஏனைய நோயாளிகளிடமிருந்து அவர்களை வேறுபடுத்துவதற்கும் இலகுவாக சிகிச்சைகளை மேற்கொள்ளும் பொருட்டும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வைத்தியகலாநிதி குணாளன் தெரிவித்தார். இதேவேளை வன்னியிலிருந்து வவுனியாவிற்கு வந்துள்ளவர்களின் சிகிச்சை நடைமுறைகள் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் மாகாண சுகாதார திணைக்கள உயர் அதிகாரி வைத்தியகலாநிதி சொலமன் தெரிவிக்கையில், நோயாளர்களுக்கு அவர்களது உடல்நிலை மற்றும் சுகாதார நிலை தொடர்பிலான அறிக்கை அடங்கிய புத்தகம் ஒன்றைத் தனித்தனியாக தாம் வழங்கியிருப்பதாகவும் அது அவர்களது மேலதிக சிகிச்சையை வேறு இடங்களில் தொடருகின்றபோது உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்தார். மெனிக்பாம் பகுதியில் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நிரந்தரக் கட்டிட வசதிகள் இல்லாத காரணத்தினால் ICRCயினால் வழங்கப்பட்ட கொள்கலன்களுக்குள் சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா நோக்கித் திரும்பியுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் கவனம்

வன்னி மக்களின் வவுனியவை நோக்கிய இடப்பெயர்வுகள் அதிகரித்த வண்ணமுள்ளன. இதனால் இதுவரை காலம் ஏனைய பகுதிகளில் தமது செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து வந்த சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் கவனம் தற்போது வன்னி மக்களை நோக்கியதாக காணப்படுகிறது. இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளிலுள்ள நலன்புரி நிலையங்களில் வாழுகின்ற ஏனைய இடம் பெயர்ந்த மக்கள் பல சிரமங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற் பாடுகள் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. ஆரம்பத்தைப்போன்று தற்போது நிறுவனங்களின் உதவி தமக்கு கிடைப்ப தில்லை என்றும் உலக உணவு திட்டத்தினால் வழங்கப்படும் உணவுபொருட்கள் மட்டுமே வழங்கப்படுவதாகவும் இதனால் முகாமில் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் ஒருவேளை உணவுடன் தாம் வாழ்ந்து வருவதாக மட்டக் களப்பில் அமைந்துள்ள பாலமீன்மடு முகா மில் வசிக்கும் சண்முகராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது அநேகமான பகுதிகள் மீள்குடியேற்றப்பட் டுள்ளன. திருகோணமலை உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட மக்கள் மட்டுமே மீள்குடி



பாலமீன்மடு 'I ' முகாம் மட்டக்களப்பு

யேறாத நிலையில் இங்குள்ள நலன்புரி நிலை யங்களில் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியே றும் வரைக்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமக்கு உதவிகளை செய்யவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். அரசசார்பற்ற நிறுவனங் கள் வன்னிமக்களின் நலனைக் கருத்திற்கொள் வதைப்போல் தமக்கும் தொடர்ச்சியாக உதவ வேண்டுமெனவும், இவ்விடயம் தொடர்பாக தாம் பல நிறுவனங்களிடம் முறைப்பாடு செய்தபோது தற்போது நிதி பற்றாக்குறை நிலவுவதாக அவர்கள் தெரிவித்ததாகவும் சண்முகராசா குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் அநேகமான நிறுவனங் கள் தமக்குத் தேவையான அனைத்து வசதிக ளையும் பூர்த்தி செய்து கொடுத்ததாகவும், தற் போது மா மட்டுமே கிடைப்பதாகவும் மாவைத் தொடர்ச்சியாக உண்பதால் நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாவதாகவும் சம்பூரைச் சேர்ந்த நடராசா கமலேஸ்வரி தெரிவித்தார்.

இவ்வாறான ஒரு முறைப்பாடு இடம் பெயர்ந்த மக்களிடம் இருந்து தனக்கோ அல் லது பிரதேச செயலகத்திற்கோ கிடைக்கப்பெற வில்லை எனவும் இருப்பினும் அரசாங்கத்தி னால் வழங்கப்படுகின்ற உணவு முத்திரை இவர்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கப்ப டும் எனவும் பதில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

தற்போது உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வருவ தாகவும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களி னால் வழங்கப்படும் உணவு மற்றும் உண வல்லாத பொருட்களும் குறிப்பிட்ட அரசசார் பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருவதாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற் கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றமையால் அதிகமான மக் கள் முகாம்களிலிருந்து அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் இதன்காரணமாகவே அரசசார்பற்ற நிறுவனங் களின் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளது டன் இதனால் பெரியளவிலான தாக்கங்கள் ஏற்படவில்லை எனவும் திருமதி கேதீஸ்வரன் கூறினார்.

பொருளாதார ரீதியாக பல பிரச்சினைக ளுக்கு முகங்கொடுத்துவரும் இப்பகுதிகளில் வாழும் இடம்பெயர்ந்த மக்கள் எப்போது தமது சொந்த இடங்களில் கால் பதிப்போம் என்ற கனவோடு வாழ்ந்து வருகின்றனர். இவர் களின் கனவு நிறைவேறும்வரை அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பும் இம்மக்களுக்கு அத்தியவாசியமாகும்.

வாகரை சிறுவர்களும் கல்வியும்



1983 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு யுத் தம் மற்றும் சுனாமி போன்றவற்றால் கடு மையாக பாதிக்கப்பட்ட வாகரைப்பிரதேசத்து சிறுவர்கள் பல்வேறு வகையிலும் பாதிக்கப் பட்டவர்களாகவே இருக்கின்றனர். மட்டக் களப்பு மாவட்டத்தின் ஏனைய பிரதேச சபை பிரிவுகளை விடவும் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இந்த வாகரைப் பிரதேசம் காணப்படுகிறது. இந்த சிறார்களது வளர்ச் சிக்காக நிறுவனங்களும் அரச அமைப்புக்க ளும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. 'சிறுவர்களது உளவியல் மற்றும் கல்வி அபிவிருத்தியை அறிந்துகொள்வதற்காக ஒவ்வொரு மாதமும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கூட்டம் பிர தேச செயலகத்தில் நடைபெறுகிறது. இதில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக பிரதேச செயலாளர் தலைமையில் பொலிஸ் பிரிவு, கல்வித்திணைக்களம், அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர் கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமத்தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள் வார்கள். இந்தக் கூட்டத்தில் ஒவ்வொரு மாதமும் இந்த சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள், அந்த பாதிப்பிலிருந்து விடு படுவதற்கான தீர்வுகள் போன்ற விடயங் கள் குறித்து கலந்தாலோசிப்பதுடன் அந்தப் பொறுப்புக்களை உரிய நிறுவனங்களி டமோ ஊர்த்தலைவர்களிடமோ அல்லது கிராம உத்தியோகத்தர்களிடமோ ஒப்ப டைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன என்கிறார் வாழைச்சேனை நீதி மன்ற நன்னடத்தைப்பிரிவின் உத்தியோகத் தர் இராசையா சற்குணநாதன்.

யுத்தத்தினால் மட்டுமன்றி சுனாமி பேர லைத் தாக்கத்தினாலும் உடல் உள ரீதியாக பாதிக்கப்பட்ட பல சிறுவர்கள் வாகரைப் பிரதேசத்தில் வசித்துவருகின்றனர். இவர்க ளுக்குத் தேவையான கல்வி மற்றும் ஏனைய உதவிகளை சிறுவர் நன்னடத்தை திணைக்க ளமானது பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து முன்னெடுத்துவருகிறது. அந்த வகையில் உள்நாட்டு அரசசார்பற்ற நிறு வனமான 'அரும்புகள்' கதிரவெளி மற்றும் வாகரை பிரதேசங்களில் விசேட கல்வித்திட் டம் என்ற அடிப்படையில் உடல் உள பாதிப்புற்றவர்களுக்கான கல்வியினை வழங்கிவருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 51 மாணவர்கள் அடையாளங்காணப் பட்டு கல்வியினைப்பெற்று வருகின்றனர். அத்துடன் இந்தபிரதேசங்களில் அமைக்கப் பட்டுள்ள பாலர் பாடசாலைகளும் வளரும் குழந்தைகளுக்கு கல்விக்கான உறுதியான அடிதளத்தைப் இடக்கூடியதாக இருக்கிறது.

இதுமட்டுமன்றி வாகரையின் 16 கிராமங் களில் சிறுவர் கழகங்களை அமைத்து அவர் களுக்குத் தேவையான உளவியல் பயிற்சி களை கிழக்கிலங்கை தன்னம்பிக்கை சமூக எழுச்சி நிறுவனம் வழங்கிவருகிறது. இந்த சிறுவர் கழகங்களில் கலாசார நிகழ்வுகள், கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றின் மூலமாக சிறு வர்களது உளவியல் தாக்கத்தை குறைத்து அதன் மேம்பாட்டுக்கான உதவிகளை செய்துவருகிறது. 'இந்த கழகங்களினால் அமைக்கப்பட்டுள்ள (3ஆம் பக்கம் பார்க்க)

'மீண்டும் வாழ்வோம்' நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம் வானொலி ஊடாக தினமும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணி முதல் 9.45மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம் வானொலியில் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 1.30 மணி முதல் 2.00 மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநூர் எப்.எம் ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 மணி முதல் 7.15 மணி வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.internews.lk என்ற இணையத் தளத்திலும் தரவிறக்கம் செய்யலாம்.

'மீண்டும் வாழ்வோம்' நிகழ்ச்சியினை திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசிய சேவையில் நீங்கள் கேட்கலாம்.

ஐ.நா. பிரதிநிதியின் வவுனியா விஜயம்

உள்நாட்டு யுத்தம் காரணமாக வன்னியிலிருந்து வவுனியாவிற்கு இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களைப் பார்வையிட இடம்பெயர்ந்த மக்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி வோல்டர் கெலின் வவுனியாவிற்கு கடந்த 4ஆம் திகதி விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார். அதன்போது இடம்பெயர்ந்த மக்களின் தேவைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். இவ்விஜயத்தில் மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரிஷாட் பதியுதீன், சமாதான செயலகத்தின் செயலாளர் ரஜீவ விஜயசிங்க, வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் உட்பட மேலும் சில உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மெனிக்பாம் நிவாரணக் கிராமத்திற்கு சென்றிருந்த வோல்டர் கெலின் அங்கிருக்கின்ற மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். மாணவர்கள் முகாம்களில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் வோல்டர் கெலினுக்கு உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் எடுத்துரைத்தார். இதன்போது தங்களது உயர் கல்வியினை தொடர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அம்மாணவர் கெலினிடம் கோரிக்கை விடுத்தார்.



வவுனியா முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா.சபையின் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி வோல்டர்கெலின் மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் றிசாட் பதியுதீன் உள்ளிட்ட குழுவினரை படத்தில் காணலாம்.

இதனைத் தொடர்ந்து அருணாச்சலம் நிவாரணக் கிராமத்திற்கு சென்றிருந்த வோல்டர் கெலின் மற்றும் குழுவினர் அண்மையில் வன்னியிலிருந்து வவுனியாவிற்கு வருகை தந்திருக்கின்ற மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், சுகாதார மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் அங்கு ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்கள். இந்த சந்திப்பு தொடர்பாக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கருத்துத் தெரிவிக்கின்ற போது, தன்னைப் பொறுத்தவரையில் அவ்விஜயமானது ஒரு நல்லெண்ண விஜயமாகவே இருந்தது. அங்குள்ள அகதிகளுக்கு அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எவ்வாறான விடயங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி மக்களுடைய கருத்தை அறிந்துகொள்வதற்கான ஒரு விஜயமாகவே தான் அதனைக் கருதுவதாகத் தெரிவித்திருந்தார்.

ஐம்பத்து இரண்டாயிரம் பேர் வரையில் இடம்பெயர்ந்து வவுனியாவிற்கு வந்திருக்கின்றபோதும் அவர்களுக்கான உதவிகளை பல்வேறு வகையில் இலங்கை அரசாங்கம் செய்து வருவதாகவும் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மேலும் தெரிவித்திருந்தார். இச்சந்திப்பின்போது ஏற்பாடாகியிருந்த வவுனியா அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களை வோல்டர் கெலின் சந்தித்து உரையாடினார். அதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்காக அரசாங்கம் அனைத்து வழிமுறைகளிலும் தன்னாலான உதவிகளை வழங்கி வருகின்றது. இருப்பினும் ஆங்காங்கே சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நிலைமைகளை மேலும் வளமாக்குவதற்கான ஆலோசனைகள் குறித்தும் அரசாங்கத் தரப்பினரோடு தான் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்திருந்தார்.

தகவல் பெட்டி

உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் சுகவீன முற்றிருக்கும் போது உங்களுக்குத் தேவையான மருந்துகளை வைத்தியரின் ஆலோசனைப்படியே உட்கொள்ள வேண்டும். மருந்து விற்பனை நிலையங்களில் உங்கள் நோயைத் தெரிவித்து மருந்துகளைப் பெறுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கின்றார் வைத்திய அதிகாரி எம்.கே.முருகானந்தன்.

சரியான நோயை அடையாளம் காண முடியாது. நோய் அறிகுறிகளை மக்களால் சரியாக அடையாளம் செல்ல முடியாது. எனவே மருந்துக்கடைக்காரர்கள் சிலநேரங்களில் தவறான மருந்துகளைக் கொடுத்துவிடுகின்றார்கள். நோயாளியின் வயது அவரது நோயின் தரம் ஆகியவற்றிற்கேற்ப அவர்களுடைய உடல் எடைக்கேற்ப மருந்தினுடைய அளவுகளில் மில்லிகிராம் கணக்கில் மாற்றம் ஏற்படும். இவ்வாறான மாற்றங்களை மருந்துக் கடைக்காரர்களால் அறிந்துகொள்ள முடியாது. மருந்துகளை உட்கொள்ளும்போது ஏன்? எதற்காக? என்று நன்றாகத் தெரிந்து உட்கொள்ளுங்கள்.

(வாகரை... 2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிக விளையாட்டுக் கூடாரங்கள் அவர்களது மன உளைச்சலை மறந்து விளையாடவும் தங்களைத் தாங்களே ஆராய்ந்தறியவும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்கிறார் இந்நிறுவனத்தின் பணிப்பாளர் ஸ்பிரிதியோன். இந்த நிறுவனமானது கல்வியை ஊக்குவிப்பதற்காக யுத்தம் மற்றும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கான மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுவதுடன் மாதாந்த கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன. இது அந்த மாணவர்களுக்கு பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்குப் பேருதவியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி இல்லங்களில் வாழும் சிறுவர்களை பெற்றோருடன் இணைப்பதற்கான முயற்சிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் மற்றும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து இத்திட்டத்தை மேற்கொள்கின்றன. மேலும் வாகரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட தரம் 5 மாணவர்கள் பனிச்சங்கேணி மகாவித்தியாலத்தில் தங்கவைக்கப்பட்டு விசேட மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆண்டு தோறும் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்காக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிறார்களது எதிர்காலத்தை கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகள் வெற்றியளிக்குமானால் மீண்டும் ஒரு வளமான சமுதாயம் கிழக்கு மாகாணத்தின் வாகரைப் பிரதேசத்தில் உருவாகும் என்பது உறுதி.



"வரவேற்பு மண்டபம் முகாமின் புற எல்லைப் பகுதியிலேயே அமைக்கப்பெறவுள்ளது"

-அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

வவுனியா முகாமில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்காக அமைக்கப் படவுள்ள வரவேற்பு மண்டபம் குறித்து அறிந்து கொள்ளும் நோக்கில் அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமர சிங்கவை நேர்கண்டோம்.

புதிதாக ஏற்படுத்தப்படவுள்ள வரவேற்பு மண்டபம் தொடர்பில் விவரிக்க முடியுமா?

அரசு இந்த வரவேற்பு மண்ட பத்தை இடம்பெயர்ந்தவர்கள் தமது உறவினர்கள் நண்பர்களை சந்தித்து கலந்துரையாடுவதற்கென அமைக்க விருக்கின்றது. பொதுவாக இது அவர் கள் தமது உறவினர்களுடனான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளவே அமைக்கப்படவுள்ளது. தற்சமயம் இடம்பெயர்ந்தவர்கள் தங்கவைக்கப் பட்டுள்ள அனைத்து முகாம்களிலும் 11ஆம் திகதி முதல் அமைக்கப்பட வுள்ளது. இது இடம்பெயர்ந்த முகாம் களில் உள்ள மக்களுக்கு பயன்தரக் கூடிய மேலுமொரு நடவடிக்கையா கும். அவர்களுக்கு விரைவில் முழு சுதந்திரமான நட மாட்டத்தை வழங்க முடியும் என நான் நம்புகின்றேன்.

இடம்பெயர்ந்தவர்களை சந்திக்க வரும் அவர்களது உறவினர்களும் நண்பர்களும் முகாம்களுக்குள் செல்வதற்கு அனுமதிச் சீட்டினைப் பெறவேண்டுமா?

இந்த வரவேற்பு மண்டபம் முகா மின் புற எல்லைப் பகுதியில் அமைந்திருப்பதால் உட்செல்வோ ருக்கு அனுமதிச் சீட்டு தேவை யில்லை. அங்கு சற்று சிக்கலான சூழ் நிலை இருப்பதால் உட்செல்பவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத் தும் ஆவணங்களுடன் செல்ல வேண்டும். அவர்கள் தமது உறவி னர்களை சந்திக்க வருகின்றபோது ஏனைய பகுதிகளைப் போன்றே அவர்களது அடையாளம் உறுதிப் படுத்தப்படும். ஆனால் வேறெந்த தடைகளும் இல்லை. உண்மையில் இது முகாமுக்குள் இடம்பெறும் சந் திப்பு அல்ல. இந்த வரவேற்பு மண்ட பம் முகாமின் புற எல்லைப் பகுதியி லேயே அமைக்கப்பெறவுள்ளது.

வோல்டர் கெலின் தெரிவித்தது போன்ற முதியவர்கள் இந்த திட்டம் மற்றும் செயற்பாடுகள் குறித்து அறிந்துகொள்ளாமல் உள்ளார்களா?

1500 பேர் முகாமிற்கு வெளியில் உள்ள தமது உறவினர்களுடன் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள் ளார்கள். உறவினர்கள் இல்லாதவர் கள் வயோதிபர் இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.



அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

அநேகமான முதியவர்கள் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். எமக்கு இத்திட்டத்தை விரைவுபடுத்த வேண்டிய தேவை இருப்பது விளங்குகின்றது. ஆனால் இந்த செயற்பாட்டில் பாதுகாப்பு காரணங்களுக்காக குறுக்கு வழிகளை முன்னெடுத்து உறவினர்கள் மேலுள்ள நம்பிக்கையின் நிமித்தம் அவர்களை அனுப்ப முடியாதுள்ளது. இது சாதாரண சூழ்நிலை அல்ல. பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தளர்த்திக்கொள்ளாமல் முன்னெடுக்கவேண்டியுள்ளது. ஆனால் அவருடைய அக்கறையை எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

இந்த முகாம்கள் அகதிகளுக்கான முன்னுதாரணமான முகாம்களாக இல்லை என்ற அவரது கருத்துக் குறித்து ஏதேனும் கூற விரும்புகின்றீர்களா?

வோல்டர் கெலினிற்கே தெரியும் இந்த உலகத்தில் அவ்வாறான முன் னுதாரணமான முகாம்கள் இருக்க முடியாது என்பது. கட்டுப்பாடுக ளுக்கு மத்தியில் நாங்களும் கூட தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்வதிலும் அவசர சூழ்நிலைக ளுக்கு முகங்கொடுப்பதிலும் சவால் களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு இலகுவான சூழலை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம் என நான் நினைக்கின்றேன். ஜோன் கெலின் தமது விஜயத்தின் போது கூட அடிப்படை வசதிகள் முகாம்க ளில் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரி வித்திருந்தார். வோல்டர் கெலின் அங்கு நடைபெறுபவை குறித்து தான் திருப்திப்படுவதாகத் தெரிவித் தார். மேலும் அங்கு சில முன்னேற் றங்களை ஏற்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் அவர் எம் மால் ஆனவற்றை நாம் செய்து வரு கின்றோம் என்பதை புரிந்து கொண் டுள்ளார் என உறுதியாகக் கருதுகி றேன். இருப்பினும் மேலும் சிறப்பா கச் செய்ய முயற்சிகளை மேற்கொள்வோம்.

வவுனியாவைத் தவிர அனுராதபுரம் மற்றும் பொலனறுவை போன்ற இடம்களில் முகாம்களை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஏதேனும் உங்களிடம் உண்டா?

தற்போது நாங்கள் வேறிடங்களில் அமைப்பதற்கு எதிர்பார்த்திருக்கின் றோம். ஆனால் நீங்கள் குறிப்பிட்ட இடங்களில் அமைப்பதற்கான எண்ணம் எம்மிடம் இல்லை. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் அமைக்க எதிர்பார்க்கிறோம். அவ்வாறான தீர்மானம் ஏதேனும் மேற்கொள்ளப் படுமிடத்து நாங்கள் உங்களுக்கு தெரிவிப்போம்.

1500 பேர் முகாமிற்கு வெளியில் உள்ள தமது உறவினர்களுடன் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள் ளார்கள். உறவினர்கள் இல்லாதவர் கள் வயோதிபர் இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

உங்களின் கதை

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். வடக்கு, கிழக்குப்பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதே எமது நோக்கம். அந்தவகையில் இவ்வாரம் 'காசநோய்' குறுநாடகம் ஒலிபரப்பானது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

காசநோய்



மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்சியில் கடந்த மாதம் 24ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச காச நோய் தினத்தை நினைவு கூறும் வகையில் காச நோய் என்ற குறு நாடகம் ஒலிபரப்பாகியது.

காச நோய் என்பது சுவாசத் தொகுதியில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு வகையான தொற்று நோய். இந்த நோய் பாதிக்கப்பட்ட வருடைய சுவாசத்திலி ருந்து நுண்கிருமியின் மூலம் இன்னொருவருக்குப் பரவும். அதேபோல் காச நோயாளி யின் உமிழ் நீரில் உள்ள கிருமிகள் காற்றில் கலந்து அந்தக் காற்றை சுவாசிப்பவருக்கு இந்த நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

காச நோய் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் பெரிய அளவில் இல்லை. காரணம் இந்த நோயின் தாக்கம் பற்றி சிந்திப்பவர்கள் குறைவாகவே உள்ளார்கள். ஆனால் ஆரம்பத்திலேயே இந்த நோய்க்கான சிகிச்சையை பெறாவிட்டால் உயிராபத்தை ஏற்படுத்தும்.

அதனால் சாதாரண இருமல் இருக்கும் போதே வைத்திய ஆலோசனை பெறுவது சாலச் சிறந்தது. தொடர்சியான இருமல் தும்மல் இருக்கும், இருமலுடன் அதிகமாக சளி வெளியேறும், சிலருக்கு சளியோடு குருதியும் வெளியேறும், அடிக்கடி தடிமன் ஏற்படும், உடம்பு சோர்வடைந்து மெலியும், காய்ச்சல் ஏற்படும், விருப்பம் இருக்காது, சிலருக்கு இரவு நேரத்தில் உடம்பு வியர்க்கும், மேற்கூறப்பட்ட அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரிடம் செல்ல வேண்டும்.

காச நேய்க்குள்ளானவர்கள் தொடர்சியாக ஆறு மாதங்கள் கட்டாய சிகிச்சை எடுத்துக் கொண்டால் நோயில் இருந்து விடுபடலாம். இந்த நோயாளர்களை தனிமைப்படுத்த வேண்டும். சுத்தமான காற்றைச் சுவாசிக்கக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். காச நோயாளர்கள் பேசும் போது, தும்மும் போதும், இருமும் போதும் சுத்தமான துணியால் வாயை மூடிக் கொள்ள வேண்டும். பின்பு அந்தத் துணியை மற்றைய துணிகளோடு சேர்க்காமல் தனியாக துவைத்து காய வைக்க வேண்டும். இவ்வாறான விடயங்களை அவதானித்து நடந்தால் காச நோய் பரவுவதை தடுக்கலாம்.

காச நோய் பரவும் விதம், நோய்க்கான அறிகுறிகள், இதற்கான சிகிச்சை முறைகள், கட்டுப்படுத்தும் வழிமுறைகள், போன்ற விடயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்திக் கூறவே சர்வதேச ரீதியாக காச நோய் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS

USAID FROM THE AMERICAN PEOPLE

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.